ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2196/50 - 2020 ඔක්තෝබර් මස 09 වැනි සිකුරාදා - 2020.10.09

2196/50 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை

### ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்

1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டம் பிரிவு 3 இன் கீழான அறிவித்தல்

261 ஆவது அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மற்றும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 123 ஆவது உப பிரிவின் கீழ் கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2020.09.10 ஆந் திகதியன்று நடைபெற்ற பிரதேச சபையின் பொதுக் கூட்டத்தில் 05.02 இலக்கத் தீர்மானத்தின்கீழ் பின்வரும் முன்மொழிவைக் கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்படுத்துவது பொருத்தமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

**ஆர். எம். டி. பீ. டபிள்யூ. எம். எஸ். பி. யட்டவர,**
தவிசாளர்,
கண்டி கடவத் சத்தர மற்றும்
கங்கவட்ட கோறளே பிரதேச சபை.

கண்டி கடவத் சத்தர மற்றும்
கங்கவட்ட கோறளே பிரதேச சபை அலுவலகம்,
2020, செத்தெம்பர் 10.



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்கப்படவேண்டிய (261 ஆம் அத்தியாயம்) 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் (2) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், 2016.02.23 ஆந் திகதி கொண்ட 1955/7 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகுதி IV (அ) ஆம் பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்டு, மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2017.05.05 ஆந் திகதியையும் 2017/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) ஆம் பிரிவு அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் மூலம் பின்வரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளான,

01. பிரதேச சபைகளின் நிருவாக எல்லைக்குள் கட்டடங்களை நிர்மாணிப்பது தொடர்பான திட்ட வரைபடங்களைப் பரிசோதனை செய்வது மற்றும் கட்டணங்கள் அறவிடுவது தொடர்பான துணை விதிகள்.

02. தகனசாலைகள் தொடர்பான துணை விதிகள்.

03. வரி அறவிடுவதற்கான தவணை அறிக்கைகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்வது தொடர்பான துணை விதிகள்.

04. பிரதேச சபையின் சந்தைகள் தொடர்பான துணை விதிகள்.

05. பொது மலசலகூடங்களைப் பயன்படுத்துவது மற்றும் கட்டுப்படுத்துவது தொடர்பான துணை விதிகள்.

06. விளம்பர அறிவித்தல்கள் தொடர்பான துணை விதிகள்.

07. விலங்குப் பண்ணைகளைக் கட்டுப்படுத்துவது மற்றும் முறைப்படுத்துவது தொடர்பான துணை விதிகள்.

08. வாடகை வாகனங்களை நிறுத்தி வைப்பது தொடர்பான துணை விதிகள்.

09. தனியார் கற்றல் நிலையங்கள் தொடர்பான துணை விதிகள்.

10. பிரதேச சபையின் பாதைகளில் செலுத்தப்படும் வாகனங்களது வேகம், நிறை என்பவற்றைக் கட்டுப் படுத்துவது தொடர்பான துணை விதிகள்.

என்பவற்றை இந்த அறிவித்தல் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து ஏற்றுக்கொள்வதெனவும், அத்தினத்திலிருந்து செயற்படுத்துவதெனவும், அத்தினத்துக்கு முதல் நாள் நள்ளிரவு 12.00 மணிவரை கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் நிருவாகப் பிரிவுக்குள் செயற்பாட்டிலிருந்த குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகளை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து மேற்குறித்த உள்ளூராட்சி அமையங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகளின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் செயலிழக்கச் செய்வதெனவும் கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபை இத்தால் தீர்மானிக்கின்றது.

**ஆர். எம். டி. பீ. டபிள்யூ. எம். எஸ். பி. யட்டவர,**
தவிசாளர்,
கண்டி கடவத் சத்தர மற்றும்
கங்கவட்ட கோறளே பிரதேச சபை.

10 - 900

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.